[1970 ஆகஸ்ட் 26

குருவாயூரப்பன் கோவிலுக்கு அரிசி விநியோகம்

*43 வின—திரு. வை. சுவாமிநாதன்: மாண்புமிகு உணவு, வணிகவரித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசு, கேரள மாநிலத்தில் உள்ள குருவாயூரப்பன் கோவிலுக்கு அரிசி வழங்க உத்தேசித்துள்ளதா?

(இ) ஆம் எனில், எவ்வளவு?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) இவ்வரசு கேரளத்திலுள்ள குருவாயூரப்பன் கோவிலுக்கு 1969-ம் ஆண்டில் மொத்தம் 300 டன் நெல் வழங்கியுள்ளது.

திரு. வை. சுவாமிநாதன்: இதுமாதிரி இன்னும் தொடர்ந்து குருவாயூரப்பன் கோவிலுக்கு அனுப்பப்பட்டு வருகிறதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இந்த ஆண்டு மனு வந்தது. அதன் மீது முதல் அமைச்சர் அவர்கள் போட்ட உத்தரவுக்கிணங்க அனுப்பப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு மனு ஒன்றும் வரவில்லை.

நீதிபதிகளாகப் பணிபுரியும் பெண்கள்

*44 வின—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எப்பகுதியிலாவது பெண்கள் ஜட்ஜ்களாகவும், மாஜிஸ்ரேட்களாகவும் பணி புரிகிறார்களா?

(இ) ஆம் எனில், எங்கெங்கு?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) தமிழ் நாட்டில் இதுவரை மாவட்ட நீதிபதியாகவும், துணை நீதிபதியாகவும், முன்சீப்பாகவும், பெண்கள் யாரும் நியமிக்கப்படவில்லை. திருமதியர் ஏ. சுப்புலட்சுமியும், சி. ஆர் ராமாயியும் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள மன்னார்குடியிலும், வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள திருப்பத்தூரிலும் குற்ற விசாரணை உதவி நீதிபதிகளாகப் பணி புரிகின்றனர்.

திரு. என். கிட்டப்பா: இப்பொழுது பெண்கள் பெருமளவிற்கு தமிழ் நாட்டில் பயின்று வழக்கறிஞர்களாக பணி புரிந்து வருவதால் தாய்க்குலம் பெருமை கொள்ளும்வகையில் ஒரு குறிப்பிட்ட சதவீதம் நீதிபதி பதவிகளையாவது பெண்களுக்கு வழங்கும் முறையைக் கைக்கொள்ள அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.

திருமதி வி. ப. பழனியம்மாள்: அரசாங்க அலுவலகங்களில் பணி புரியும் ஆண்களை விட பெண்கள் தான் மிகச் சிறப்பாக பணி புரிவதாகத் தெரியவருகிறது. ஆகவே, நீதித் துறையிலும் பெண்களுக்கு அதிகப்படியான இடம் ஒதுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

1970 ஆகஸ்ட் 26]

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பெண்கள் முன்வந்தால் ஆட்சேபணை இல்லை.

THIRU R. PONNAPPA NADAR : May I know from the Hon. Minister whether in the proposed recruitment of District Judges, women would be given their due share?

THE HON. THIRU S. MADHAVAN : No name has been recommended by the High Court?

திரு. அ. லெ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, இப்பொழுது இந்த அரசு பொறுப்பேற்ற பிறகுதான் தமிழ் நாட்டில் நெல்லை மாவட்டத்தில் முதன்முதலாக ஒரு பெண்மணி பப்ளிக் பிராஸிகியூட்டராக நியமிக்கப்பட்டிருக்கிறார். அந்த அளவுக்கு பெண்களை முதன்முதலாக ஜட்ஜுகளாக நியமிக்கின்ற பெயரையும் இந்த அரசு தட்டிக்கொண்டு போகுமா என்று அறிய விரும்புகிறேன். டிஸ்டிரிக்ட் ஜட்ஜு போஸ்டுகளுக்கு பெண்களை நியமிப்பதற்கு இப்படிப் பட்ட சலுகைகள் வழங்குவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்த ஆட்சி பொறுப்பேற்றவுடன் தாய் குலத்திற்கு பெருமைதரத்தக்க அளவில் ஒரு பெண்மணியை இந்தப் பதவிக்கு நியமித்து நல்ல பெயரைப் பெற்றுக் கொண்டிருப்பதாக கனம் அங்கத்தினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இப்பொழுது மாவட்ட பப்ளிக் பிராஸிகியூட்டராக நாம் நியமித்திருக்கிறோம் பெண் குலத்தைச் சேர்ந்தவரை. மாவட்ட நீதிபதியைப் பொறுத்த அளவில் அரசியல் அமைப்புச் சட்டப்படி உயர் நீதிமன்றம் சிபாரிசு செய்ய வேண்டும். இதற்கு மனுப் போடுவதிலிருந்து பெண்களைப் பொறுத்த வரையில் எந்த விதமான டிஸ்குவாலிபிகேஷனும் நாம் செய்யவில்லை.

THIRU T. MARTIN : The Hon. Minister has stated in his reply that no woman lawyer's name has been included in the list recently sent by the High Court for selection of District Judges. May I request the Hon. Minister to state the number of women lawyers who were interviewed by the Selection Committee for the selection of District Judges?

THE HON. THIRU S. MADHAVAN : The hon. Member may put a separate question.

Representation of Bar Association, Karur.

* 45 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Bar Association, Karur in Tiruchirappalli District has represented to the Government about 8th March, 1970 for shifting the Sub-courts from Tiruchirappalli; and

(b) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.